S-1

**தமிழ் இணையக் கல்விக்கழகம் (Tamil Virtual Academy)**
**சென்னை – 600 025.**

**ஆசிரியர் பட்டயப் பயிற்சி**
**தாள் –2 அடிப்படைத் தமிழ் இலக்கணம்**

**முதல் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2025**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(**குறிப்பு:** பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3 இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. வட்டமான கோடுகளைக் கொண்டு எழுதப்படும் எழுத்து எது?
2. 'அ' முதல் ;ஔ' வரை உள்ள எழுத்துக்ளை எவ்வாறு அழைப்பர்?
3. தமிழில் எழுத்து சீர்திருத்தம் கொண்டு வந்தவர் பெயர்?
4. இதழ் குவிந்து பிறக்கும் உயிர் எழுத்துகள் யாவை?
5. 'நாற்காலி', 'முக்கண்ணன்' ஆகிய சொற்களை வழங்கும் பெயர் எது?
6. பெயருக்கும் வினைக்கும் இடையில் பிறக்கும் சொல் எது?
7. "மலையும் மலை சார்ந்த இடமும்" –என்பது எத்திணையைக் குறிக்கும்?
8. "கடுவன் " – என்ற மரபு பெயர் குறிக்கும் விலங்கு எது?
9. தமிழில் மொத்தம் எத்தனை எழுத்துகள் உள்ளன?
10. "திணை என்னும் சொல்லுக்கு பொருள் யாது ?
11. இலக்கணப் பிழைபடப் பேசுவதையும் எழுதுவதையும் எவ்வாறு அழைப்பர்?
12. காலம் எத்தனை வகைப்படும்?
13. வடமொழியில் "புட்பம்" என்பதை தமிழில் எவ்வாறு அழைப்பர்?
14. தமிழில் தோன்றிய முதல் "அகராதி" எது?
15. மின்னஞ்சல் மூலம் பதிவு செய்து தன் படைப்புகளை உலகிற்கு வெளிப்படுத்தும் இணையச் சேவையின் பெயர் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. ஓவிய எழுத்துப் பற்றி எழுதுக.
2. பதம் என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.
3. வேற்றுமை உருபுகள் குறித்து எழுதுக.
4. வஞ்சப்புகழ்ச்சி அணியை எடுத்துக்காட்டுடன் தருக.
5. திசைச்சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.
6. மரபுச் சொற்கள் மூன்றினை எடுத்துக்காட்டுடன் தருக.
7. தமிழ் வளர்ச்சி இயக்கத்தின் பணிகள் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.
8. உங்கள் நாட்டில் தமிழ்மொழியை வளர்க்க நீவிர் மேற்கொள்ளும் பணிகள் யாவை?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) தமிழ் மொழியின் தோற்றம், வளர்ச்சிக் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) தமிழ் எழுத்தொலிகள் பிறக்கும் முறைகளை் குறித்து இலக்கண நூல் வழி விளக்குக.

2. (அ) பேச்சுத் தமிழுக்கும் எழுத்து தமிழுக்கும் உள்ள வேறுபாட்டினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) திணை, பால் , எண், இடம், காலம், வழுவமைதி ஆகிய இலக்கண மரபுகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

3. (அ) யாப்பின் உறுப்புகள் யாவை? ஏதேனும் ஒரு திருக்குறளுக்கு அசை பிரித்து எழுதிடுக.

(அல்லது)

(ஆ) தமிழ் இணையக் கல்விக்கழக மின்நூலகம் தமிழ் கற்றல் – கற்பித்தலுக்கு எவ்வாறு உறுதுணைப் புரிகின்றன என்பதை நிறுவுக.

***